**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி**
**அசல் வழக்கு எண். 250/2012**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. அருள்முருகன் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. பச்சமுத்து | தொழில் | .. விவசாயம் |
| வயது | .. 30 | ஜாதி | .. |
| கிராமம் | .. சுண்டமேட்டுர் | நாள் | .. 01.03.2022 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. அருள்முருகன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 – அருள்முருகன் - 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

வழக்கு சொத்திற்குண்டான மூலபத்திரத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தை அதற்குண்டான மூல பத்திரத்தை நீங்களோ, உங்களது தகப்பனார் பச்சமுத்தோ அல்லது மணிவாசகம் பார்த்தீர்களா என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. அதேபோல், வில்லங்கச்சான்றிதழ் ஏதேனும் பார்த்து வாங்கினாரா என்பது உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. உண்மையாக ஒரு சொத்தை வாங்கவேண்டும் என்று நினைத்திருந்தால், நீங்கள் அதன் மூலப்பத்திரம் மற்றும் வில்லங்கச்சான்றிதழை பார்த்து வாங்கியிருப்போம் என்றாலும், இந்த பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு சொத்தை வாங்கியுள்ளதால்தான் அவ்வாறு பார்த்து வாங்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தானது என்னுடைய மற்ற நிலங்களுக்கு இணையாக உள்ளது என்று சொன்னால், சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் கிரைய உடன்படிக்கை பத்திரம் அமலில் இருந்தபோதுதான் மணிவாசகம் 05.06.2008 ஆம் தேதி வழக்கு சொத்தை வாங்கினார் என்றால், பிரதிவாதிகள் மோசடி செய்துதான் சொத்தை வாங்கியுள்ளார்கள். கிரைய உடன்படிக்கை பத்திரம் அமலில் இருந்தபொழுதுதான் வழக்கு சொத்தானது வாங்கப்பட்டது என்று சொன்னால், ஒப்பந்தத்தை மோசடியாக தயார் செய்து

கொடுத்துள்ளார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாலசுப்ரமணியத்தின் மீது ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.217/2008 இல் தீரப்பாணை பெற்றது தற்போது வரையில் அமலில் உள்ளது என்றால், நீதிமன்றத்திலேயே பொய்யாக காண்பித்து தீர்ப்பு பெற்றுள்ளார்கள். 05.06.2008 ஆம் தேதி மணிவாசகம் என்பவர் கிரையம் பெற்றது சட்டப்படி செல்லாது என்பதால் உங்கள் தகப்பனார் பச்சமுத்து 23.06.2009 அன்று மணிவாசகத்திடம் கிரையம் பெற்றது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று கூறினால், சரியல்ல. எனது தகப்பனார் 06.06.2015 ஆம் தேதியில் வாங்கிய கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. மணிவாசகம் உங்கள் தகப்பனார் பச்சமுத்து மற்றும் நீங்கள் வஞ்சக்கூட்டு சேர்ந்து கொண்டு 23.06.2009, 06.06.2011 செட்டில்மென்ட் பத்திரமும் பொய்யாக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. ஆகையால், பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.217/2008 இல் பெற்ற உத்தரவு என்னை கட்டுப்படுத்தும் என்றால், சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் பாலசுப்ரமணியத்திடம் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை கேள்வி கேட்பதற்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனார் அசல் வழக்கு எண்.49/2009 இல் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படிதான் வழக்கு சொத்தை வாங்கினார் என்றால், சரிதான். மேற்படி ஒருதலைபட்சமாக அ.வ.எண்.49/2009 இல் வழங்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால், சரிதான். வழக்கு சொத்தில் நான் சுவாதீனத்தில் இருந்துவருவதாகவும், அதில் விவசாயம் செய்து வருவதாகவும், கூறுவது பொய் என்றால், மணிவாசகம் அதன்பிறகு எனது தகப்பனார் பச்சமுத்து, தற்போது நான் விவசாயம் செய்து வருகிறேன். பட்டா முதற்கொண்டு எனது பெயரில் தான் உள்ளது. வழக்கு சொத்தில் முழு உரிமை உள்ளது என்று கூறுவது பொய்யென்று சொன்னால், சரியல்ல. ஒரு செல்லாத தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையிலும், கிரையப்பத்திரத்தின் அடிப்படையிலும் பட்டா மாற்றம் செய்துள்ளது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்குசொத்தானது என்னுடைய சொத்திற்கு இணையாக உள்ளதால், அதனை அபகரிக்க வேண்டும் என்ற துர்நோக்கத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. அ.வ.எண்.217/2008 இன்படியான நிறைவேற்று மனு எண்.26/2016 தற்போது நிலுவையில் இருந்து வருகிறது என்றால், நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி நிறைவேற்று மனுவில் இடைக்கால ஒரு மனு

செய்து அதில் வழக்கு சொத்தானது எனக்கும், மணிவாசகம் மற்றும் பச்சமுத்து என்பவருக்கும் சேர்ந்து உரிமையானது என்று தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். அந்த மனுவில் பாலசுப்ரமணியம் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. நானும், பாலசுப்ரமணியம், மணிவாசகம், எனது தகப்பனார் பச்சமுத்து ஆகியோர் 1 முதல் 3 பிரதிவாதிகளை ஏமாற்றி தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு, மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளதால், தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கில் கூறியுள்ளபடி எந்த வழக்கு மூலமும் எழவில்லை என்று சொன்னால், சரியல்ல. எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / அருள்முருகன்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.